ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශේෂමානது

අංක 2345/46 - 2023 අගෝස්තු මස 16 වැනි බදාදා - 2023.08.16

*2345/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 155 ஊஊ ஆம் உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அரசியலமைப்பின் 155 ஊஊஊ உறுப்புரைக்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் வகுக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்குவிதிகள்

**ஈ. டப்ளியூ. எம். லலித் ஏக்கநாயக்க,**
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு,
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம்,
9 ஆவது கட்டடம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 7,
2023, ஓகத்து 16.

**பொது மக்களின் முறைப்பாட்டு விசாரணை தொடர்பான செயற்பாட்டு விதிகள்**

01. இவ் **விதிகள் "நடைமுறை ஒழுங்கு விதிகள்-2023 (பொலிஸ் அதிகாரிகள் அல்லது பொலிஸ் சேவைக்கு எதிரான மக்கள் முறைப்பாடு விசாரணை)**" என அறிமுகப்படுத்தப்படுகின்றது.

02. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பொதுவாக பொலிஸ் சேவையின் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட ஏதேனுமொரு நபரிடமிருந்து அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்படும் ஒரு நபரிடமிருந்து (இதன் பின்னர் **"முறைப்பாட்டாளர்"** என அழைக்கப்படும்) கிடைக்கப்படும் முறைப்பாடுகள் அதிகாரமளிக்கப்படும் ஒரு நபரினால் பொறுப்பேற்கப்பட்டு (இதற்குப்

பின்னர் **பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு** என அறிமுகப்படுத்தப்படும்) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவிற்கு அல்லது (இதற்குப் பின்னர் **"ஆணைக்குழு"** என அழைக்கப்படும்) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் எந்தவொரு **மாகாண அலுவலகத்திற்கும்** நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமைய பொருத்தமான நிவாரணத்தை பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட முடியும்.

இங்கு முறைப்பாட்டாளரினால் உரிய முறைப்பாட்டினை அனுப்பும் போது கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கி முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. முறைப்பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி
II. முறைப்பாட்டாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்
III. முறைப்பாட்டாளரின் தொலைபேசி இலக்கம் (இருப்பின்)
IV. முறைப்பாட்டுக்குட்படும் பொலிஸ் நிலையத்தின் பெயர்
V. முறைப்பாட்டுக்குட்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி அல்லது அதிகாரிகளின் ஆளடையாளம் அல்லது வேறு தொடர்புடைய தகவல்கள்
VI. முறைப்பாட்டுக்கமைவாக சம்பவம் நடந்த மாவட்டம்

03. மேற்கூறப்பட்ட 02ஆவது ஒழுங்குவிதிகளின் எதிர்பார்ப்புக்கமைய ஆணைக்குழுவின் அல்லது பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவுக்கு மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், மாகாண பணிப்பாளர் அல்லது விசாரணை உத்தியோகத்தராக ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட,பெயரிடப்பட்ட அதிகாரம் கொண்ட உத்தியோகத்தரினால் (இங்கு இதற்குப் பின்னர் '**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்**' என அறிமுகப்படுத்தப்படும்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

04. ஆணைக்குழுவினால் நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்தாபிக்கப்படும் மாகாண அலுவலகங்களுக்கும் '**மாகாண பணிப்பாளர்கள்**' நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட மாகாண பணிப்பாளர்கள் மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெறும் பொது மக்கள் முறைப்பாடு தொடர்பான விசாரணைக்கு பொறுப்பாளராக செயற்பட வேண்டும். மாகாண பணிப்பாளர்கள் ஆணைக்குழுவின் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவின் பணிப்பாளருக்கு நேரடியாக அறிக்கையிட வேண்டும்.

05. பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பொதுவாக பொலிஸ் சேவைக்கு எதிராக கிடைக்கும் பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் காலதாமதமின்றி பத்து (10) வேலை நாட்களுக்குள் **அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால்** முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

06. பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு அவசியமான சந்தர்ப்பத்தில் அதற்காக மேலதிக **சுயாதீன விசாரணை உத்தியோகத்தர்களை** நியமிப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உண்டு. அவ்வாறு நியமிக்கப்படும் சுயாதீன விசாரணை அதிகாரிகளினால் ஆணைக்குழுவின் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவின் **பணிப்பாளரின்** வழிகாட்டலுக்கு அமைய விசாரணைகள் அல்லது கடமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

07. பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரை விசாரணை செய்வதற்கும், அவ்வாறான நபர் அல்லது நபர்களை பரிசோதிப்பதற்கும், ஒரு மூன்றாம் நபரினால் முறைப்பாடு செய்யப்பட்ட விடயம் தொடர்பாக மற்றும் அல்லது அதற்கமைவாக பொலிஸ் நிலையத்திற்கு செய்யப்பட்ட வாக்கு மூலங்களின் பிரதி மற்றும் அம் முறைப்பாட்டின் விசாரணைக்கு உரியதான வேறு ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்,வேறு அறிக்கைகள்,ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கும், பொது மக்கள் முறைபாட்டு விசாரணையொன்றை மேற்கொள்ளும் போது பொலிஸ் நிலையங்களுக்கு விஜயம் செய்வதற்குமான அதிகாரம் "**அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு**" அல்லது ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு "சுயாதீன விசாரணை உத்தியோகத்தருக்கு" ஆணைக்குழுவினால் வழங்கப்பட முடியும்.

08. பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக தேவையான ஆவணங்கள், தகவல்கள், உபகரணங்களை துரிதகதியில் வழங்குவதன் மூலம் ஆணைக்குழுவின் மக்கள் முறைபாட்டு விசாரணை பணிப்பாளருக்கு வசதிகளும் ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும் என பொலிஸ் மாஅதிபரினால் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும் கண்டிப்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

09. மேற்கூறப்பட்ட 02 ஆவது ஒழுங்குவிதியின் எதிர்பார்ப்புக்கமைய விசாரணை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது சுயாதீன விசாரணை அதிகாரிகளுக்கு அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொடுத்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு பதவி வேறுபாடுகள் இன்றி அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் கடமைப்பட்டுள்ளனர். அவ்வாறு எழுத்து மூலம் கோரப்படும் அறிக்கை மற்றும்

ஆவணங்களை இருவார கால எல்லைக்குள் வழங்க வேண்டும். அவ்வாறு முடியாத பட்சத்தில் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் குறிப்பிட்டு இரண்டு வாரங்களுக்கு மேற்படாத நீடிப்பு காலத்தை பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிக்கு உரிமை உண்டு.

10. அவ்வாறானதொரு பொதுமக்கள் முறைப்பாடு கிடைத்து 03 மாத கால எல்லைக்குள் விசாரணை செயற்பாடுகளை முடிவுறுத்தி அவ் விசாரணையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் எதிர்வுகூறல்களை முறைபாட்டாளருக்கு அறிவிப்பதற்கு ஆணைக்குழு அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தம்மால் செய்யப்பட்ட முறைபாடு தொடர்பாக இறுதியில் கிடைக்கப்பெற்ற தீர்ப்பு அல்லது எதிர்வுகூறல் தொடர்பாக அறிந்து கொள்ளும் உரிமை அனைத்து முறைபாட்டாளர்களுக்கும் இருக்க வேண்டும்.

11. முறைப்பாடொன்று விசாரணை செய்யப்படும் போது பொலிஸ் அதிகாரியினால் ஒழுக்கமீறல் அல்லது விழுமிய மீறல் அல்லது பொலிஸ் அதிகாரியொருவருக்கு பொருந்தாத ஒரு நடத்தையை உறுதிப்படுத்தும் தவறு அல்லது செயல் பொலிஸ் அதிகாரியொருவரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்தால் தாபனக் கோவையின் ஏற்பாடுகள், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட திணைக்கள உத்தரவுகள் மற்றும் குறிப்பிட்ட அரச சுற்றுநிருபங்கள் உள்ளிட்ட மற்றும் அதற்கு வரையறுக்கப்படாத, நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கமைய செயற்பட வேண்டும்.

12. பொது மக்கள் முறைப்பாடொன்றுக்கமைய மேற்கொள்ளப்படும் விசாரணையில் குற்றவியல் தவறொன்று வெளிக்கொணரப்படும் சாட்சிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் நாட்டில் காணப்படும் சட்ட விதிகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவ்வாறான விடயம் அல்லது விடயங்கள் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

13. முறைப்பாடு விசாரணை செய்யும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்புடைய ஒரு விடயத்திற்கு இவ் விதிமுறைகளில் ஏற்பாடுகள் இல்லாதவிடத்து அது தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

14. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2017, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை 2047/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 நடைமுறை சட்டதிட்ட விதிகளை (பொதுமக்கள் முறைப்பாடு) உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

EOG 08-0175

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.